DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.107/2014

Deposition of witness for: PW - 10

Name :Muthupandian Father/Husband Name:E.Chinnachamy

Village : Taluk :

Caste : Calling :S.I.

Religion : Age :

Date : 26.11.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.13ம் தேதி 19.45 மணிக்கு மதுரை - நத்தம் மெயின்ரோட்டில் அய்யர்பங்களா செக்போஸ்டில் நானும், த.கா. குமரகுரு 1500, முதல்நிலை காவலர் டார்வின் 155, த.கா. பாலசுப்பிரமணியன் 1908 ஆகியோர்கள் ஊமச்சிகுளம் காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்களுடன் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது டி.என்.64 பி 3727 என்ற பதிவெண்கொண்ட யமாக இருசக்கர வாகனத்தில் 2 நபர்கள் வந்தபோது அவர்களை நிறுத்தி விசாரித்தோம். அவர்கள் முன்னுக்குப்பின் முரணமாக தகவல் சொன்னதால் மீண்டும் அவர்களை விசாரித்தபோது அவர்களின் ஒரு நபர் கதிரவன் என்றும் மற்றொருவர் அசோக்குமார் என்றும் அவர்கள் தாங்க்ள இருவரும் மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் தனியாக செல்லும் பெண்களிடம் செயினை அறுத்ததாகவும், தற்போது திருப்பாலை சென்று அங்கு தனியாக வரும் பெண்களிடம் செயினை அறுப்பதற்காக செல்வதாகவும் தானாக முன் வந்து கொடுத்த தகவலின்பேரில் அவர்களை இருசக்கர வாகனத்துடன் காவல் நிலையம் அழைத்துச்சென்று காவல் ஆய்வாளர் உதவியாக இருந்தோம். பின்னர் எங்கள் மற்ற பணிக்கு சென்றுவிட்டோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

பொதுவாக நான் அலுவல் ரீதியாக ஒரு வேலைக்கு போகும்போது அந்த காவல் நிலைய பொறுப்பு அலுவலர் யார் யாருக்கு என்னென்ன

வேலை என்று நியமனம் செய்வார் என்றால் சரிதான், ஆனால் நாங்கள் சிறப்பு தனிப்பிரிவு என்பதால் எங்களுக்கு அவ்வாறு ஒதுக்குவதில்லை. அப்படியென்றால் நாங்கள் என்னென் பணி செய்கிறோம் என்று எங்கள் உயர் அதிகாரிகளுக்கு எப்படி தெரியும் என்றால் எங்களுக்கு ஒரு பணியை ஒதுக்குவார்கள் அதை நாங்கள் செய்து முடிப்போம், தினம் தினம் என்ன பணி என்று குறிப்பிட்டு சொல்லமாட்டார்கள். தனிப்பிரிவு அமைப்பதற்கு ஏதேனும் கடவுச்சீட்டு, உத்தரவு எதுவும் கொடுக்கப்படுமா என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் Proceedings -ஐ வைத்து தனிப்பிரிவு அமைக்கப்படும். அப்படி எந்த ஒரு Proceedings -ம் நீதிமன்றத்தில் தாக்கவல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நாங்கள் எதிரியை விசாரிக்கும்போது அருகிலிருந்த யாரையாவது சாட்சிகளாக சேர்த்தோமா என்றால் இல்லை. அவ்வாறு விசாரிக்கும்போது ஒவ்வொருவரும் முன்னுக்குப்பின் முரணாக பதில் சொன்னதால் அவர்களை ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு எங்கள் பணிக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். எதிரியை எவ்வளவு நேரம் விசாரித்தோம் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் 15 நிமிடம் விசாரித்திருப்போம். 08.05.13ம் தேதிக்கு பின்பு என்னை ஊமச்சிகுளம் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் ஒத்தக்கடை காவல் ஆய்வளர் விசாரித்தார். 14.05.13ம் தேதி ஒத்தக்கடை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் மேற்சொன்ன விசயங்கள் அனைத்தையும் ஒத்தக்கடை காவல் ஆய்வளாரிடம் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அவர் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தவரை ஊமச்சிகுளம் காவல் நிலையம் அழைத்துக்கொண்டு சென்று அவர்மீது துப்புதுலங்க முடியாத பொய் வழக்குகள் போடப்பட்டது என்றால் சரியல்ல. நான் அன்றையதினம் எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பின்பு இந்த வழக்கு விசாரணையில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், என் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் எதிரிமீது புள்ளிவிவர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.